உ

குகமயம்.



# சண்முகானந்தகீதாரசம்.

இஃது யாழ்ப்பாணம்

சி. சுப்ரமணியதாஸர்

அவர்களால் இயற்றி

மலையாளம் இடக்காடு

K. T. கோபால நம்பியார்

அவர்கள் பேர் உதவியைக்கொண்டு

அச்சுவாகனம் ஏற்றப்பட்டது.

---

மஹா விகடதூதன் ஆபிஸ்

மெர்குரி பிரஸ்,

சென்னை.

விலை [2 அணா

Registered Copy Right.

9 - NOV 1923

Q26:417
N23
85760

உ

ஏகமயம்.

# சண்முகானந்தகீதாரசம்

## விநாயகர் துதி.

### வெண்பா.

முந்துதவினை தீர்க்கும் முருகன்மே லிக்கவியை
விந்தையுடன் யான்பாட வேண்டினேன்—அந்தமிகு
வல்லபைதன் நாயகனே வந்தெனித யத்திருந்து
நல்லருளை யீவீர் நயந்து.

## சரஸ்வதி துதி.

### விருத்தம்.

தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கு மம்மனையுச் சாந்தம் பூச்த
குவளைமலர்க் கண்ணாளைப் பெண்ணாளும் பெண்ணமுதைக் கோதிலாதப்
பவளவிதழ்ப் பசுங்கொடியை நான்முகனார் நாவோங்கும் பாவை தன்னை
கவளமதக் கயக்கொம்பின் முலையாளைக் கலைமாதைக் கருது வாமே.

## சிவபெருமான் துதி—விருத்தம்.

மூலமா யெவைக்கு மறியொணா வுருவாய் மும்மலங் களைந்தெவர்க் கெழி
ஆலபோ சனஞ்செய் தழிவிலாதவனா யருமறைச்சிரந் தொளிர்பயனாய் (தாய்
பாலலோ சனனாய்ப் பசுதொறும் பதியாய்ப் பக்குவ சனகனா தியர்க்காய்
ஆலமர் நீழ லமர்ந்துறை பவனே யகத்தவி சிருத்தியின் படைவாம்.

## சுப்ரமணியஸ்வாமி துதி.

### ஆசிரியவிருத்தம்.

கன்னல்செந் நெல்கமுகு கதலிபலா மாவாதி
கனிவர்க்கம் நிறைபழ னமும்
கண்டவர்க ளித்திடும் கற்பகச் சோலையுங்
கருதரு பசுக்கூட் டமும்
அன்னமொடு நாரைகயல் மச்சம்வ ரால்குறவை
யரவிந்தம் நிறைபொய் கையும்
அளியினம் வந்துறீங் காரமது பாடிமது
வதையுண்ணு மோசை யழகும்
மண்ணுளில் வந்தநீர்ப் பிரளயம் வந்தாலும்
மூழ்கிடாக் கோபுரங் களும்
முப்புரிநூல் வேதியர்கள் சாமகீ தந்தனை
முழக்கிடும் வீதி யழகும்
தன்னிகரி லெதுவுமிணை யில்லையென வேகூறுந்
தலமாஞ் செந்தி நகரில்
தங்கியே யிரப்பவர்க் கருளதை யளித்திடும்
தலைவனே யருணை வாழ்வே.

இராகம் கமாஸ் தாளம் ஆதி

கண்டாரைக் கண்டு கொண்டால் எ-வ-மெட்டு.

கண்ணிகள்

கந்தாநின் காட்சி தந்தாற்
கரையேறலாகும்-இடரேகும்
வந்தாதரிப்பாரிலா வதங்கக் கண்களுங் கலங்க
(நின்புகழ் துலங்க

பந்த வினையதனாற் பாவியானேனே வீணாய்
செந்திற்பதி சண்முகா சேர்த்துஉந்தன் கரங்கோர்த்து
எந்தன் மிடி தீர்த்து க

வரமயிலுமில்லையா மனமுனக்குமில்லையா
வருகுவதுந்தொல்லையா-வரனே-பன்னிரு கரனே
எண்ணரும் பரனே. க

அருளளி தயாநிதியே யமரர்சேனாபதியே
குருபரா நீயே கெதியே-கூடிக்-காவடி-கொண்டாடி
வந்தேனுனை நாடி க

நீர்க்குமிழியிக் காயம் நின்னைவிடி லென்சகாயம்
ஆர்க்குத்தெரியாதுன் மாய-மடர்ந்து-சித்ரமயில்நடந்து
மைந்தனெனைத் தொடர்ந்து க

கற்பூர தீபங்காட்டி-கரங்கள் சிரமேற் சூட்டி
சுப்ரமண்யதாசன் கவி-சொல்லக்-கொண்டபகைவெல்ல
என்றுமொரு வல்ல க

ஆசிரியவிருத்தம்.

ஆறுமுக மாடவிரு வாறுபுய மாடவிரு
ஆறுபொற் கரமு மாட
வடியாட முடியாட வரியகுண் டலமாட
வழகுசெப மாலை யாட
வீறுடைய வேலாட வேதங்க ளாமாட
விரிகமல நயன மாட
விள்ளரு சதங்கையுறு கிண்கிணிக ளுமாட
வீரவா குவுமு னாட
கூறரிய தண்டாடக் கோழியங் கொடியாடக்
குறவர்குல வனிதை யாடக்
குணமுள்ள பொதிகைமுனி யருணகிரி நின்றாடக்
கோதைதெய் வானை யாட
ஏறுமயில் தானாட விக்கவியை யான்பாட
வெவ்வினைக டாமு மோட

எண்ணரிய செந்திலம் பதிவாழு முருகனே
யீசனே யெனையாள் வாயே.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

(ஆர்போய்ச் சொல்லுவார் எ-வ மெட்டு)

பல்லவி

வாதேன் செய்குறீர்-இதுவுன்சூதோ
ஏழையென் மீதிலேந்த

சரணங்கள்

பாதிமதிபுனைந்த பரமனருள் குமரா
மாதுதெய்வ குஞ்சரி மணந்திடுஞ் சுகுமாரா
மந்திரதந்திரபோதா சுந்தரப்பாதா கந்தநாதா வா

கல்லைப்பெண்ணாக்கி வைத்த கண்ணன் மருமகனே
தில்லையில்வல்ல நடஞ்செய்த வறுமுகனே
திருத்தணி மலைவாசா—அன்பர்கள் நேசா-தேவாதிதேவ

மாங்கனிக் காயிமய மலைவலம் வந்தவனே
பாங்குடன் தேன்தினைமாப் பாகமு துண்டவனே
பாலன்மேற் கண்பாராய்-அன்புகூராய்-இன்னமுந்தீரா

ஐயையோ என்னைப்போலோர் அரும்பாவியாரு முண்
துய்யவடிமலர்க்கு தொண்டுசெய்வாருமுண்டோ (டோ
துன்பஞ்செய்திடலாமா-தர்மமுமாமா-கர்மமுமீதா

மைத்துனன்றனைக்குட்டி மாசிறைவைத்தபோதும்
புத்திரன்மேற் கருணைபொழிந் திடுவாயெப்போதும்
சுப்ரமண்யதாசன்கூறும் கவியில் நீரும்'மகிழ்ந்தேகாரும்

ஆசிரிய விருத்தம்

கடலாடை கொண்டிலகு படிமீது ஜீவரைக்
காத்திடக் கருணை கொண்டு
கனமான கயிலைமலை திருவேர கம்பழனி
கருதரிய குமர கோட்டம்
தடமேவு கொடுமளூர் சென்னிமலை செங்கோடு
தாழ்விலா வுடுப்பு நகரம்
தக்கபோ ரூர்பரங் குன்றமரு ணாசலம்
தகைபாந் திருத்த ணியொடு
மடமேவு செந்திநகர் தோகைமலை விராலிமலை
மாட்சியுள கந்த கோட்டம்
மருவுதில் லைத்தலம் சிக்கவே ளூர்திரு
மயிலைபழ முதிர்சோ லையும்

இடமான சோலைமலை யினியதமிழ் வளரியாழ்ப்
பாணநா டெங்கு மொன்றாய்
எழுந்தேயி ரப்பவர்க் கென்றுமரு ளீந்திடு
மிணையிலாக் கந்த வேளே.

இராகம் சங்கரா பரணம் தாளம் ஆதி

முத்துக்குமரையனே எ-வ-மெ.

பல்லவி

செந்தூர் முருகையனே -மைந்தனெனையும்
வந்தாதரி மெய்யனே

அநுபல்லவி

சந்த்ர சூரியர்பணி கந்த நாத செ

சரணங்கள்

மந்த்ர வடிவேல்கொண்டுமந்த வசுரர்கள் முன்வந்த
பொழுது மவரெந்த விதமுமுயிர் தந்தே போகாதுடல்
பிழந்தே யமரர்புரிந்த. செ

பண்டோர் புகழும் வல தண்டா யுதனினடி
கண்டே தோளிற்காவடி கொண்டே யாடியும்பல
தொண்டே செயவென்வினை யண்டா தகன்றிடவும்

காடுமலை குகைகளோடி பசியால் மிகவாடி
நாடோறுமுனைத்தேடிப் பழனிப்பதிநாடிகரங்கள்சிரஞ்
சூடிப் பணிந்திடவும் செ

நேசன்யாழ்ப் பாணன்பதி வாசன் வளர் தமிழ்ப்ர
காசன் நின்மேலேவிசுவாசன்சுப்ரமணியதாசன்கவியில்
நடராசன் மகனே தினம் செ

ஆசிரியவிருத்தம்

மங்கையர்கள் காதலது வெண்ணைவிட் டோடவும்
மறுஜெனன மில்லாமலும்
மனமது கலங்கிட வருத்திடும் வாதகா
மாலைபல தொடரா மலும்
சங்கைபெறு மன்னர்தம் சபைதனிற் சென்றுபொய்ச்
சாட்சிய துரைக் காமலும்
சலனமெனும் பந்துசோ தரமித்தி ராதியோர்
சாராதி ருக்கா மலும்
எங்குமே புகழ்தங்கு மெம்மராச தூதரெனை
யிட்டுமே வருத்தா மலும்
என்றென்று முன்பாத கமலமதை மறவா
திருக்கவன் பதையூட் டியும்

கங்கையுமை மைந்தனே கயிலையுறை கந்தனே
காட்சியத ளித்து மென்மேற்
கண்ணருட் பார்வையால் காத்துவர மீகுவாய்
கதிர்காம வடிவே லனே.

இராகம் தோடி தாளம் ஆதி

சித்தாதி தேவர்கள் எ-வ-மெ.

கண்ணிகள்

புள்ளிமயிலினிற் றுள்ளிவிளையாடும்
கள்ளமாயன்மருகா தெள்ளுதமிழ் வள்ளிமகிழ் முருகா

சரவணப் பொய்கையி லறுமுக னுய்வந்த
குருபாகுகனே-அரவணிருத் திரர்க்கு மொருமகனே

வேதம் முழுதும் விநாயகன் தம்பியாய்
ஓதும்வடிவேலனே-யாதுணைய லாது துணைசீலனே

சுப்ரமணியதாசன் செப்புங்கவிதனக்
கற்புத னேயுவந்து-நற்பதமும ளிப்பீர் நலம்புரிந்து

ஆசிரியவிருத்தம்

சோலைமுரு காவிராலி தோகைமுரு காபழனி
சொல்லரிய காஞ்சி முருகா
சூர்கிளை வேரறச் சூலமொடு தண்டுவாள்
சுடர்வேல் பிடித்த முருகா
வாலைமுரு காவிந்த்ர ஜாலமுரு காவள்ளி
வனிதையை மணந்த முருகா
வளமுடைய இமயகிரி தன்னையோர் மாங்கனிக்காய்
வலஞ்செய்த முருகா
பாலமுரு காபரம ஞானமுரு காநல்லைப்
பதிதனி லெழுந்த முருகா
பன்றியுரு வாகியே படியதை யிடந்திட்ட
பச்சைமான் மருக முருகா
கோலமுரு காமயிலி லேறுமுரு காசிவக்
கொழுந்தா யிலங்கு முருகா
குற்றங்க ளெத்தனை கோடிநான் செயினுநின்
குளிர்பத மிருத்தி டாயே.

இராகம் இந்துஸ்தான் தாளம் ஆதி

கோலாகலக்குமரா எ-வ-மெ

சூலாயு தக்குமரா—சூலாயுதா
பாலா சத்தியருளும் வேலா உனைப்பணியும்

பாலனென்றனை யாளவேதினம் ஜாலஞ் செய்திடா
தோடிவருவாய் (சு

தொகையறு

தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கு மெட்டிடாத்
தேடருஞ் சுப்ரமண்யா
தினந்தின மருணகிரி செந்தமிழ்க் குவந்துநற்
றெள்ளமுத மூட்டியுண்டா
ஆரவார மோடுவந்த-சூரர்கள் தமையுங் கொன்ற
ஆதியே-பரஞ்-சோதியே-குணநீதியேபிரக்யாதியேயுடை

தொகையறு

மானதைத் தேடியே மறைவேட உருவாகி
மாவனஞ் சென்று குறவர்
மானினைக்கண்டு ஓர் மானிங்கு வந்ததை
மானே நீ கண்டதுண்டா
என்றபல வுரைகள் பின்ள எது அடையாள முள்ள
தென்றுமே யவள்நின்றே நன்மொழி யன்றே யுன்முன்

தொகையறு (புகன்றவேளையில் சு

வள்ளியே நான்சொலும் மானதோ புள்ளிமான்
வளர்ந்த-விரு கொம்புமுண்டு
வட்டமா யேறிட்ட பார்வையதுமுண்டுமென்
வாயினாற் சொல்லொணாது
என்னதுன்பந்தான்வந்தாலுமேகியேபிடிப்பேன் நானும்
என்னவே பரண் அண்ணமார்களும் முன்னெதிர்வர

தொகையறு (வேங்கையதாகியசு

உலகத்தி லுன்னைவிட வேறு ஓர்தெய்வமில்லையென்றுமே
உன்பதத்தை
உண்மையுடன் நாடியே இவ்விடம் தஞ்சமென
உறுதியுடன் வந்துநிற்க (தும்
சுப்ரமண்ய தாசன்கூறும் சொற்சுவைக்கு வந்தெப்போ
சுத்தனே பரமுத்தனே மலை அத்தனேநலசித்தனேஎனை

## ஆசிரியவிருத்தம்.

அன்னைதன் வயிற்றினி லீரைந்து மாதமா
யாண்டவனானி ருக்க
அன்போடு பால்பழஞ் சர்க்கரை யினும்மேலா
மமுதமதை யூட்டி வைத்தும்
பின்னையோ பிறந்திட்ட போதுபா லூட்டியும்
பேய்பூத மணுகிடாது

பெருமையுட னுனதுதிரு வடிமலரை மறவாது
பேசவுங் கிருபை வைத்தும்
கன்னலைப் போன்றவென் மொழியதனைக் கேட்டுமனல்
காய்ந்திடும் மெழுகா யுளம்
கரைந்தேவி ரைந்தெதிரில் வந்துமே கட்டிக்கற்
கண்டெனவும் முத்த மிட்டும்
இன்னமுஞ் சொல்லவு மளவிடற் கரிதான
வினியதுணை தந்த வையா
என்மீதி ரங்கிமயில் தன்மீது வந்துபத
மீந்திடும் பழனி வாழ்வே.

இராகம் பைரவி தாளம் ரூபகம்

பல்லவி

கந்தனின் கற்பூர தீபம்-கண்ணைக்
கண்டாலோ நாம்செய்த பண்டுவினையறும்

அநுபல்லவி

கானதனில் வேடனுகிக் கடிதில் வேங்கை மரமுமான

சரணங்கள்

காலனைக் காலா லுதைத்தவன் பாலனை
நீலமயிலேறும் நிசாசரர் காலனை
சூலம்வாள் தாங்கு சுடர்வடி வேலனை
வாலை சரஸ்வதி வாழ்த்திடு சீலனை
வனிதைய ரறுவர்கள் மகவென வருதருபர சிவசரவண
பவனெனு கதிர்காம மாமலைதனிலெழுமுருகனுமறுமுக

மாருத ஈளை மாந்தை குன்ம ரோகமும்
ஆருத குட்ட மருஞ்சய ரோகமும்
கூருத வாதம் கொடுஞ்சல ரோகமும்
தீராத நோய்களைத் தீர்த்த மருந்தெனும்
திரைகடல் சூழ்ந்திடு முலகுள வெவர்களுந்திடமுடன்
வந்துமே
முறைமுறை தொந்துவிழுந்துமே அரகரவென்றுபணிந்
(திடும் க

வளமுடை வையாபுரியில் நீராடி
களப கஸ்தூரிமலர்களுந் தேடி
பழவகை பால் இளநீருடன் கூடி
பழனிமலையப்பன் பதந்தனை நாடி
பரிவுடனொருகரங்கூட்டி சிரமது தன்னிலே சூட்டி
வருவருபல தொலையோட்டிமனமதையொருநிலைகாட்டி

சுப்ரமண்ய தாசன் சொல்கவி கேட்டும்
முப்பழஞ் சற்கரை யாமமு தாட்டும்
எப்போது முந்தனடியாரிற் கூட்டும்
தப்பிதஞ் செய்தாலுந்தான்வழி காட்டும்.
தருணமிதினி லெனைநீ விடுதல தகுதியாசொலுமுருகா
கிருபாகரனே பரனே அரனே குகனே கழுகுமா மலை
தனிலெழுந்திடு (க

ஆசிரியவிருத்தம்

இப்பிறவி யேயுலகி லெப்பிறவி தன்னிலு
மெழிலுடைய பிறவி யெனவே
யெத்தனையோ மேலோர்கள் செப்பிடக்கேட்டுமென்
னிதயமது மேகலங்கி
இப்பொழுதி லேயினது திருவடியே தஞ்சமென
வெண்ணிச் சந்நிதி யில்வந்து
மிருகரங் கூப்பியுடல் பொருளாவி மூன்றையு
மிசைநதுனக் கேய ளித்தேன்
தப்பிதங்க ளெத்தனை செய்திட்ட போதிலும்
தயவுவைத் தேபொறுத்துத்
தருணமிது தன்னிலே கருணைமழை தந்துமே
தாபரித் திடுவை யென்றும்
முப்புரந் தனையுமே யெரித்தசிவ னார்க்குமுன்
மூலமாம் பிரண வத்தை
முற்றுமே மொழிந்திட்ட சுப்ரமண் யாகயிலை
முதல்வனே தணிகை வாழ்வே.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

கண்ணிகள்

செந்தூர் வளர் முருக தேவா-பதந்
தேடிப் பணிந்தேன் வரந்தாவா
திங்களணி சங்கரனின் றங்கவடி வேலவனே
கந்த புஷ்கரணியுறை சண்முகா-எந்தன்
கவலைபதை நீக்கிடுவாய்தண் குகா
காளகண்டன் பாலனான வாலசுப்ர மண்யதேவா
வாவா மயூரமேறி வேலவா-பொல்லா
வருத்தமறுக்க வின்றுமேலவா
வள்ளிதெய்வ யானையோடு கள்ளமான்மருகனே
வெள்ளி வடிவேல் பிடித்த வையா-சூரர்
வேரற முடித்த முருகையா
வெள்ளிரதமேறி வந்து துள்ளிவிளை யாடி யின்று

ஆறுமுகனான குமரேசா-உனை
அண்டி வந்தேன் நானும் முருகேசா
ஆதரித்துச் சுப்ரமண்ய தாசனின் கவிக்குவந்து

ஆசிரிய விருத்தம்.

மல்லிகை சந்தனங்க டப்பமொடு கஸ்தூரி
மணமுள மருக்கொ ழுந்து
மாட்சியிரு வாட்சிசெந் தாளைகரு நொச்சியொடு
மகிட்சிதரு பிச்சி கோங்கு
சொல்லரிய செவ்வந்தி செண்பகம் குங்குமம்
சோகமுறு வெட்டி யலரி
சொர்ணமனோ ரஞ்சிதம் நந்தியா வட்டம்
சொலித்திடும் கொன்றை வில்வம்
முல்லைரோ சாமருவு புன்னைதும் பையுருகு
முதல்வர்கொள் வெள்ளெ ருக்கு
முண்டகம் முதலாய மலர்கள்வா கனைகொண்டு
முருகனே யுனைப்ப ணிந்தேன்
அல்லல்தனை யோட்டியே நல்லருளை யூட்டியே
யடியேனை யாட்கொள் ளுவாய்
அரியபோ ரூர்ப்பதியி லமர்ந்துமயின் மீதிலெழு
மறுமா முகக்க டவுளே.

இராகம் கேதாரகௌடம் தாளம் ரூபகம்

மாங்கனிக்காய் எ-வ-மெ.

கண்ணிகள்

வான்புகழ்ந்திட வல்லசுரர் தம்முனர்கை
தாங்கிடக் கொண்டோர் தண்டதனைக் குன்றதுபோல்
ஓங்கியே யவரோடிடவே வாதுகள் செய்
உருவே வளர்தருவே ஒருதிருவே நலதருவேபா

தேன்கமழ்ந்திடுந் தில்லைவளர் சங்கரனார்
தான்நினைந்திடத் தங்கிநுதற் பொங்கியெழுந்
தேசரவண வணமீதினி லேவந்தவெழில் (திடுவாய்நிறை
இறைவா எந்தன் குறையா வையும் முறையேபொறுத்

தீம்புனந்தனில் தித்திக்குந் தெள்ளமுத
மாங்குறக் குல வரிவையிடம் பிரியமுடன்
தேன்தினை யமுதுண்டு களிகொண்டவொரு
தேவா சுப்ரமண்யக்கவி தாசன் றனைக்காவாய் நிதம்

## ஆசிரியவிருத்தம்.

தாருகன் சிங்கமுகனொடு சூரனுதிய வவுணர்
தாஞ்செயுங் கொடுமை தானுந்
தாங்கொணு தமரர் சென்றேபுர மெரித்தவுன்
தந்தையர்க் குரைக்க முன்னுட்
கூறரும் பெர்றிகள் ருகவே நீயுங்
குதித்தவர் றுதலி னின்று
கூற்றுவன் போற்சென்று மேயமர் புரிந்துமவர்
கொடியவலி கண்டு கண்டு
வீறுடைய வேலாயு தத்தினை விடுத்துமே
வெட்டியே துண்டு துண்டாய்
விண்ணவர்கள் சிறைமீட்ட வெண்ணரியவண்ணலே
வேதமுத லான பொருளே
பாருலகி லென்குறைக டமையுமக் கேயலாற்
பகர்வொரு கடவு ளுண்டோ
பட்சமது காட்டியெனை யிச்சமய மாளுவாய்
பரங்குன்றெ ழுந்த குமரா.

இராகம் கீருவாணி தாளம் ஆதி

கண்ணிகள்

வடிவேலரசே-நான் வருத்தஞ்சகிக்கமாட்டேன்
திருத்தியாட் கொண்டிடுவாய்
படியளந்த மாயன் மருகோனே
துடிநடமிடு மயிலேர் முருகோனே

செந்திவேலையா-இதோ சேவடிதொழுதேனே
யாவலா யுனைநாடி
மந்திர வுபதேச மறையதை யன்று
தந்தையர்க் குரைத்திட்ட தலைவனே யின்று

தங்க வடிவேல்-செங்கை தாங்கியே சென்றுமே
யேகிட வசுரரை
பங்கஞ்செய் திட்ட பார்வதி பாலா
செங்கரங் கூப்பினேன் சிறுவனை யாளாய்

சரவண பவனே-சாமி சாற்றியே ஏற்றியே
போற்றினே னனுதினம்
அரவணிந் தோன்மகனே யறுமுகனே
பரகதி யளித்திடுவாய் பரகுகனே

சுப்ர மணிய தாசன்-சொல்லிடுங் கவியைக்கேட்டு
விள்ளரும் வழியைக் காட்டி
முப்பழஞ் சற்கரை போலரு ளூட்டி
எப்போதுமே யுந்தனடி யாரிற் கூட்டும்

ஆசிரிய விருத்தம்

இருபுறமு மிருதேவி மார்களுஞ் சூழ்ந்திடவு
மிணையிலா ரத்னங் களா
லிழைத்திட்ட மாலைகள் பதக்கங்கள் மார்பினி
லிலங்கிடவுஞ் சூல மொடுவேல்
கரத்திற் பிடித்துமென கர்மவினை நீக்கக்
கசிந்துமே கருணை கொண்டு
கழுகுமலை கதிரைமலை பழனியி லிருந்தாலுங்
கானமயின் மீது வந்து
உருக்கமுட னேயதிரு வுபதேசந் தந்துமெனை
யுன்னடிக் கடிமை யாக்கி
உத்தமனெ னப்புகழு முற்றிடச் செய்குவா
யுலகளந் திட்ட நெடுமான்
மருகனே எட்டிகுடி முருகனே மாதவர்
மகிழ்ந்திடும் மாய ரூப
மாணிக்க மேநல்ல வாணிப்பொன் னேஸ்வாமி
மலைமேவு குமரே சனே.

இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி

பாராம லேவருவேனோ எ-வ மெ.

பல்லவி

பாரா திருப்பதே னையா-பரங்குன்றையா

அநுபல்லவி

பன்னிரு கண்களிருந்தும் பாலகனாய் நானிருந்தும்

சரணங்கள்

வீராதி வீர ராகிய சூரர் வீழ
வீழ வடிவேல் விடுத்தருக பா

மாதவர் பணியே மாபலாக் கனியே
மாசிலாதமணியே மனமிரங்கி பா

நானொரு பாவியே னுனைமேவி நாடி
நாடிவாவே நல்லரு ளீயா பா

காவடி வேலா காருண்ய சீலா
கால காலன் பாலா கண்ணருள் தந்து பா

பாலன் சுப்ரமண்ய தாசன் பணியும்
சூலபாணியே யெனையும் பா

இராகம் பைரவி பல்லவி தாளம் ரூபகம்

தந்திமுகன் சோதரா-திரு-இந்த
தருணத்தினில் வருவாயே கருணைபுரிந் தருள்வாயே

அநுபல்லவி

தாளம் தவில்முரசொடுபலமேளங்குழலொலிமிகுதிருற-த
தகதிக தகஜெணு தோமெனநடமிடுமயின்மிசையாடிய
தரணியோர் புகழ்சரவணபவ வறுமுககுக குருபரசிவ
சார்ந்திடுந் துயர்தீர்ந்திடக் கிர்பை கூர்ந்திடும் குரு
கூர்ந்திடும் நல-த

சரணங்கள்

தந்தைக்கு மந்திர மோதிய வேலனே
தானவர் போற்று தயாபர சீலனே
சுந்தர வள்ளி தெய் வானைமணாளனே
சொக்கன்மீனாட்சி முத் தாடிடும் பாலனே
சூரர்கள் கிளையது பொடிபட
சுடர்வடி வேல்விடு திறமுடை
கூறருஞ் செந்திலம் பதிவளர்
கோல கால பார வீர த

தந்தையில் லாதவன் மைந்தனென் றுமிந்த
தரணியோர் சொல்லு துன்பத்தினுற் சொந்த
மைந்தனென்மீது மனமில்லையா சந்த
மாமலை மீதினிலேயெழு தந்திர
மந்திர யந்திர பாதா
மாமறை கூறிடு போதா
சந்ததம் சுப்ரமணிய தாசன்
கவியில் நாளும் மகிழ்ந்து த

இராகம் தோடி தாளம் ஆதி

ஓ ர டி.

பரமானந்த மெய்ப்பரங் குன்றோன் எ—மெ.

பல்லவி

கதிர்காம மாமலைத் தெய்வீகம்—கருணை தங்கும்
கதிர்காம மாமலைத் தெய்வீகம்

அநுபல்லவி

காட்டும் வழியருளா லார்க்குந் தெரியாதுறை
பூட்டும் கருணைமொழி தீட்டு மற்புத முறை—க

## சரணங்கள்

தவராசர் நித்தியமுஞ் செங்கை-சிரமேற்கொண்டு
புவமோடத் தாத்தியஞ்செய் சங்கை-உளத்தினால்
சிவசாயுச்சிய மளிக்குங் கங்கை-யதிலிருந்து
அவமான மற்றெவையுந் தூங்கை-ஜெயஜெயென

வந்து பணிந்து குவிந்து முனைந்துமே நின்று
செந்தினையாவுந்
தந்து விழுந்து தனைந்து மழிந்துமே யின்று
வள்ளி மணாளன்
சேவடி பூவடி காவடி பாவடி தங்கும்
அருட்கருணை
மாவடி மயிலடி தாவடி பணியடி பொங்கும்
அருணகிரி
நேருமே புகழ் யாருமே சொலத் தீருமே
துயர் சோருமே பிணி கெட்டு
திடுக்கிட்டு
ஆருமே கரம் வீறுமே யெனச் சாருமே பயம்
மாறுமே பகையட்டு
அசுரர்குழாம்
தூளி தூளி நிறு தூளியாகவே
கூளி காளி களி கூர வாளியதை விட்டு
அமரர் சிறை
மீளி யாளி யளி கோழி யங்கொடிலய
வாழி வாழி யென நட்டு
சீரலைவாய்
தெள்ளுதிரை யள்ளிவரு விள்ளுமொரு
புள்ளிமயில் துள்ளுருக வள்ளுமருள்
வள்ளலெனக் கொள்ளும் வடிவேலா
தெய்வானைபங்கன்
செஞ்சரணந் தஞ்சமென அஞ்சலிசெய்
தெஞ்ச லின்றிக் குஞ்சரமு கர்க்கிளைய
வஞ்சமனக் கெஞ்சகன்ற வேளே
எனைத்தொடரும்
பாதக மாகிய தோதக வினைகளே
சீதள பத்தும பாதம தணைகுவர் பற்று

இலாதகன்று
ஏகிட வேலையே விட நீ மனந் தாவிட
வேவர மேவிடுவார் தூய ரற்று
வழிபடகின்
மங்கள மெங்கு முழங்க விளங்கும்
திங்க ளணிந்திடு சங்கர தன்சுத–துங்க
விசாக னென்றும்
பங்கம தின்றியே தங்கிய மாமலை
சங்க முழங்க களங்க மகன்றிட விங்கே
நாமெல்லோரும்
சந்ததமுங் கந்தமலர் தந்துமே பணிந்திடவும்
விந்தையாய்ச் சுப்ரமண்ய தாசன் கவி புகழ்ந்திடவும்
வந்தனை புரிந்தவர்கள் பந்தமே யகன்றிடவும்
கந்தசர வணபவ னெந்தையென வீற்றிருக்கும் க

இராகம் ஆரபி தாளம் ஆதி

பல்லவி

வாதுரையே வாதுரையே–கந்தன்
வருத்தமறுக்க வின்று முரந்த மயில்மேல் நின்றும்

அநுபல்லவி

ஆதரவினி நமக் காருமை விடவும்
ஆண்டவநீர் கைவிடாது கொந்திடவும் வா

சரணங்கள்

மாதர் வலையிற் சிக்கி மயங்கியே யுழன்றேன்
மன்னித்தாட் கொள்ளுவா யென்றுமே நினைந்தேன்
காதலோடு கண்ணீர் கசிந்துனைப் பணிந்தேன்
கட்டிமுத் தாடுமென் கந்தசாமியே துணிந்தேன் வா

காசெனு மாசைப்பிடித்தென்னை யாட்டி
கருத்து முழுதையுமே வாட்டி
நேசமிலாதவர் போலெனைக் கூட்டி
நித்த நித்தமுந் தொல்லைசெய தேவழிகாட்டி வா

பூமியெனும் பெரிய பொல்லாத பூதம்
புரட்டிப் புரட்டிச் செவிதனிற் பலவேதம்
ஆமிதே வான்பொரு ளெனவுப தேசம்
அறைந்திட்டதே சரணடைந்தே னுன்பாதம் வா

உன்னடிக் கடிமை யாகாதவ ரிந்த
வுலகினிற் பிறந்துமென் தான்சுகமந்த
கன்வரும்பொழு தவனெறிந் திடுமந்த
சுயிற்றிற் சிக்கிடாக் கிருபை கூர்ந்துமே முந்த வா

பாடுபட முடியா தினியெந்த னாலே
பட்டதெலாம் முன்செய் வினையதனாலே
வீடுபெறுவதும் நின் கருணை தன்னாலே
விதிவச மென்னவோ நானறியேனே வா

சிற்பர மானதோர் சிவசுப்ர மணியா
சேவற் கொடிக் கதிபனான நற் கணியா
சுப்ரமணிய தாசன் கவிபுகழ் புண்யா
சுத்த சித்த முத்தர் புகழ் ரூபலா வண்யா வா

இராகம் தேசிக தோடி தாளம் ஆதி

முருகா குகா சண்முகா முத்திதருவாய்
ஒருதிரு மருப்பினை யொடித்துப் பாரதமதைப்
பொருப்பி லெழுதினோன்றன் றம்பியேஉனைநம்பினேன்

அண்டிவந்த வேழையை-யகற்றிவிடல்
தண்டாயுதபாணி தருமமோ விது வுமக்குத்
தொண்டனைக் காருங்கதிர்வேலா-வடிவேலவா

சந்தவரை வந்தெழு சரவணனே
பந்தவினையை நீக்கிப் பாவன்மீது கண்ணோக்கி
எந்தனை யாளும் முருகையனே யென்னையனே

கடலினொளி தானுமுன் காதுதன்னை
அடைத்த பொழுதிலுந்தா னரியசயனமதாற்
கடைத்தேறப் பார்க்கவும்மாலாகாதா-என்மேல் வாதா

பக்தியொடு வுந்தன்மேற் பண்புடனே
மெத்தக் கவிகள்பாடுஞ் சுப்ரமண்ய தாசர்க்கு
நித்தமருள் தனையு மூட்டுமேன் வழிகாட்டுமேன்

இராகம் கேதாரகௌளம் தாளம் ஆதி

காயமிதை மெய்வாழ் வென்றே
காத்து நெடுநாளா யிருந்தேன்

மாயம் மாயம் பொம்மலாட்டம்
மக்கள் பெண்டிருஞ் சூதாட்டம்
நோயிதாம் பிறவியற நோக்கியே கண்பாருங்குக

கஞ்சைபுஞ்சை பணமிருந்தால்
நானுமுன் தம்பிதா னென்பார்
பஞ்சமது வந்தால் முகம்
பார்த்திடவு மேவிரும்பார் கா

சூர்கிளை வேரறுக்கச்
சுடர்வடிவேல் தான்விடுத்த
ஆறுமுகங் கொண்டவையா
ஆதரிப்பீர் நீரும் துய்யா கா

இயமன் வாதைப் பொல்லாது
என்னுற் பொறுக்க லாகாது
பயமதாகுதே மென்மேலும்
பட்சம்வைத் தாள்வா யென்னாளும் கா

சுப்பிரமணிய தர்சன்
சொல்கவிக்கு வந்திந்நேரம்
நற்பதம ளித்திடுவீர்
நாதனே நானுமுன் பாரம் கா

இந்துஸ்தான் தோடி அடதாளம்

அம்பிகா உன்மகன் குகன் எ-வ-மெ

பல்லவி

மங்களம் மங்களம் ஜெய
மங்களம் மங்களம் ஜெய

சரணங்கள்

துங்க கரிமுகர்க்கும் சங்கரக்கும் சரஸ்வதிக்கும்
சங்கமேந்து மாயற்கும் சாற்றுபரன் தேவியர்க்கும் ம

செந்தியிற் கந்தசாமிக்கும் இந்திரன் தந்தயானைக்கும்
சுந்த்ர வள்ளி நாயகிக்கும் மந்த்ரவடி வேலவற்கும்
சந்தவரை சேவலுக்குஞ் சாற்றுநன் மயூரத்திற்கும் ம

அன்பனுமருணகிரிக்கும் இன்பனும்பொதிகைமுனிக்கு
மன்புக ழாச்சாரியர்க்கும் நன்குறு மடியார்கட்கும்
மன்புறுநன் னுவலர்க்கும்முத்தமிழ் சேர் பாவலர்க்கும்